தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் – திரு.மு.சிவகுமார், எம்.எஸ்சி., பி.எட்., எம்.பில்.,
ந.க.எண்.8385/அ1/2018 நாள். .02.2022.

------

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – பொது பணிகள் – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.தே.மோகன் என்பாரின் வாரிசுதாரர் திரு.மோ.இராஜசேகரன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. கும்பகோணம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1766/அ1/2010 நாள்.05.08.2016.
2. அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்26.02.2021.
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/2021, நாள்.09.04.2021 மற்றும் 17.06.2021.
4. கும்பகோணம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5367/அ1/2018, நாள். .10.2018.

------

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கல்வி மாவட்டம், சுவாமிமலை, அரசு மேல்நிலைப்பள்ளியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 22.01.2009 அன்று காலமான திரு.தே.மோகன் என்பாரின் வாரிசுதாரர் திரு.மோ.இராஜசேகரன் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 08.08.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2 இல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2 இல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(5.1)** 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

**(5.2)** மேலே பத்தி 5.1 இல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப்

பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்பு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2-ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4-ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு.மோ.இராஜசேகரன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 08.08.2016 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி, திரு.மோ.இராஜசேகரன் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.
01/03/2022

**பெறுநர்:**

திரு.மோ.இராஜசேகரன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம்
(உரிய வழியாக)

**நகல்:**

1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, திருநாகேஸ்வரம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர், கும்பகோணம்.
3. பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.